செ.வெ.எண்.74 நாள்: 30.01.2020

**தூத்துக்குடி வ.உ.சி. துறைமுக ரெட் கேட் வளாக பகுதியில் சூப்பர் கேஸ் நிறுவனத்தின் 2வது எரிவாயு சேமிப்பு கிடங்கு அமைப்பதற்கான பூமி பூஜையில் தூத்துக்குடி வ.உ.சி. துறைமுக பொறுப்புக்கழக தலைவர் திரு.ராமசந்திரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்**

---

தூத்துக்குடி வ.உ.சி. துறைமுக ரெட் கேட் வளாக பகுதியில் சூப்பர் கேஸ் நிறுவனத்தின் 2வது எரிவாயு சேமிப்பு கிடங்கு பூமி பூஜை இன்று (30.01.2020) நடைபெற்றது. நிகழ்ச்சியில் தூத்துக்குடி வ.உ.சி. துறைமுக பொறுப்புக்கழக தலைவர் திரு.ராமசந்திரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகம் வளாக பகுதியில் சூப்பர் கேஸ் நிறுவனத்தின் 2வது எரிவாயு கிடங்கு அமைக்கப்படவுள்ளது. இந்த நிறுவனத்தின் மூலம் நமது மாவட்டத்திற்கு ரூ.500 கோடி முதலீடு கிடைத்துள்ளது. முதலீடு மட்டுமல்லாமல் 150 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும் மற்றும் பல்வேறு நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது. இந்த நிறுவனத்திற்கு ஏற்கனவே 8,500 மெட்ரிக் டன் எரிவாயு சேமிப்பதற்கு கிடங்கு உள்ளது. தூத்துக்குடி மற்றும் தென்மாவட்டங்களில் அதிக தேவை இருப்பதால் குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தில் சேமித்து வைத்தால் வணிகம் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்று தூத்துக்குடி மாவட்டத்தில் 12 ஏக்கர் அளவில் 30,000 மெட்ரிக் டன் 2வது எரிவாயு சேமிப்பு கிடங்கு கட்டப்படுகிறது. இந்த நிறுவனத்திற்கு துறைமுக பொறுப்பு கழகத்தின் மூலம் 12 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு சார்பில் தொழில்துறையில் ஒற்றைசாளர முறை திட்டம் மூலம் பல்வேறு தொழில்களுக்கு அனுமதிகள் தாமதமின்றி உடனுக்குடன் வழங்கப்படுகிறது. இந்த துறைமுக கிடங்கு பணிக்கும் உடனடியாக அனுமதி தரப்பட்டது. நமது மாவட்டத்தில் புதிதாக தொழில்கள் துவங்குவதற்கு காலி இடங்கள் கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் புதிதாக தொழில்கள் துவங்குவதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் முழு ஒத்துழைப்பு அளிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் சூப்பர் கேஸ் நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி திரு.சாந்தனு குகா, திட்ட இயக்குநர் திரு.பிஸ்னு தத்தா, திட்ட மேலாளர் திரு.காளிதாஸ், திட்ட மேலாளர் (இயக்கம்) திருமதி.ஹாட்சி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி